**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO-93/2025**
**Dated :06.05.2026**
**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (Defacto Complainant)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நவிலேஷ் குமார் | வயது | : | 22 |
| தந்தை பெயர் | : | வீரேந்திர பிரசாத் | தாலுகா | : | நாளந்தா, பீகார் மாநிலம் |
| கிராமம் | : | அட்வல் மிஹார் | தொழில் | : | கூலிவேலை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

(சாட்சி தனக்கு தமிழ் கொஞ்சம் பேச தெரியும் என்றும் இந்தி நன்றாக தெரியும் என்றும் கூறியதால், காவல்துறை வேண்டுகோளின் பெயரில் இந்திய ராணுவத்தில் பணிபுரிந்து 2001 ஆம் ஆண்டு ஓய்வு பெற்று தற்போது, சென்ட்ரல் பேங் ஆப் இந்தியா, கந்தர்வகோட்டை வங்கி கிளையில் இந்தி மொழி தெரிந்த கண்மேனாக பணிபுரியும் திரு.ஜி.முருகானந்தம் என்பவரால் சாட்சி இந்தியில் கூற அதனை தமிழில் மொழிபெயர்த்து கூறப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.)

நான் 2023 ஆம் ஆண்டு வாக்கில் சுமார் 1 ஆண்டு தமிழ்நாட்டில், புனல்குளம் கிராமத்தில் உள்ள KSRM மில்லில் வேலை செய்து வந்தேன். நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 16.05.2023 ஆம் தேதி எனது தந்தை வீரேந்திர பிரசாத், புனல்குளத்தில் உள்ள KSRM ரோலிங் மில்லில் பணிபுரிந்த நபர்களுக்கு சமையல் வேலை செய்து வந்தார். மேற்படி தேதியில், கம்பெனியில் இருந்து வெளியில் வந்து கிங்ஸ் கல்லூரியின் எதிரில் உள்ள கடைக்கு சாப்பிடுவதற்காக சென்ற போது தஞ்சாவூர்-புதுக்கோட்டை மெயின் ரோட்டில் மதியம் சுமார் 2.00 மணியளவில் சென்று கொண்டிருந்தார். நான் அவருக்கு பின்னால் சுமார் 100 மீட்டர் தொலைவில் சென்று கொண்டிருந்தேன். அப்போது, அவருக்கு பின்னால் தஞ்சாவூரில் இருந்து வந்த TN 93 3894 என்ற பதிவெண் கொண்ட லாரி அதிவேகமாக வந்து அ
வர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. அதனால் எனது தந்தைக்கு தலையிலும் உடல் முழுவதும் காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். அவரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம்.

பின்னர் இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டி போலீசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **(மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி விபத்து ஏற்படுத்திய லாரியை ஓட்டி வந்த ஓட்டுனரை பார்த்தேன். ஆனால் 3 வருடம் ஆகிவிட்டதாலும் எனது தந்தை அடிப்பட்ட பதட்டத்தில் இருந்ததாலும் அவரது முகம் எனக்கு பதிவாகவில்லை. தற்போது என்னால் அவரை அடையாளம் காட்ட முடியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு தமிழ் முழுவதுமாக தெரியுமா என்றால் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். தமிழ் எழுத தெரியாது. படிக்கத் தெரியாது. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் எழுதப்பட்ட கையொப்பம் என்னுடையது அல்ல என்றால் சரிதான். நான் சொல்ல சொல்ல பல்தேவ் சிங் என்பவர் எழுதினார். நான் கையொப்பம் செய்தேன். மேற்படி பல்தேவ் சிங், என்னுடன் வேலை செய்த நபர் என்றால் அதே மில்லில் மேற்பார்வையாளராக பணிபுரிந்தார். நான், பல்தேவ் சிங் மற்றும் என்னுடன் பணிபுரிந்த நபர்கள் கலந்து ஆலோசித்து தான் புகார் அளித்தோம் என்றால் நான், பல்தேவ் சிங், விஜேந்தர் மற்றும் சந்தோஷ் ஆகியோர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம். அதில் பல்தேவ் சிங் என்பவருக்கு மட்டும் தமிழ் தெரியும். ஏன் இந்தி மொழியில் புகார் கொடுக்கவில்லை என்றால் எனக்கு இந்தி எழுத தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் கம்பெனியின் செக்யூரிட்டி கோவிந்தராஜ் என்பவரும் அசோக் என்பவரும் விபத்து குறித்து மேனேஜரிடம் சொன்னதன் பெயரில், மேனேஜர் என்னிடம் சொன்னதாக சொல்லியுள்ளேன் என்றால் நான் சொல்லவில்லை. மேனேஜருக்கு நான் தான் தகவல் சொன்னேன். மேற்கண்டவாறுதான் நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றாலும் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. KSRM மில்லில் இருந்து எனது தந்தை சாப்பிட சென்ற ஹோட்டல் சுமார் 500 மீட்டர் தூரத்தில் இருக்குமா என்றால் சுமார் 100 அல்லது 200 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சாலை வளைவாக உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 16.05.2023 ஆம் தேதி நான் மில்லிற்கு வேலைக்கு சென்றேனா என்றால் சென்றேன். மில்லில் காலை 6.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி நேரம் வரை பணி நேரமாகும். மில்லிற்கு உள்ளேயே தங்குமிடம் உண்டு. மில்லை சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் அமைக்கப்பட்டு கேட்டில் செக்யூரிட்டி பணியில் இருப்பார் என்றால் சரிதான். இரண்டு கேட்டுகள் இருந்தது. அதில் ஒரு கேட் வழியாக உள்ளே சென்று வருவோம். அதில் செக்யூரிட்டி இருப்பார். செக்யூரிட்டி அனுமதி பெற்று தான் மில்லிற்கு வெளியே வரவேண்டும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் மில்லில் என்ன வேலை செய்து கொண்டிருந்தேன் என்றால் மில்லின் உள்ளே கேட்டிற்கு அருகே இரும்பு கம்பியை வெட்டிக் கொண்டிருந்தேன். செக்யூரிட்டி கோவிந்தராஜ் சொல்லிதான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் விபத்தில் இறந்த நபர் எனது தந்தை என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றாலும் சரியல்ல. எந்த தேதி, மாதம், வருடம் எந்த பெயர் கொண்ட போலீசார் என்னை விசாரித்தார் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரியல்ல. 16.05.2023 ஆம் தேதி விசாரித்தார்கள். போலீசார் பெயர் தெரியவில்லை. நான் எதிரியை பார்க்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் திரு.ஜி. முருகானந்தம் என்பவரால் இந்தி மொழியில் மொழிபெயர்ப்பு செய்து படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.05.06 17:23:32 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**(**நான் நீதிமன்றம் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் தமிழில் கூறியதை அதே வார்த்தைகளில் சாட்சிக்கு எவ்வித மாற்றமும் இல்லாமல் தெரிவித்து அவர் இந்தி மொழியில் அளித்த பதிலை அதே வார்த்தைகளில் எந்த மாற்றமும் செய்யாமல் மொழிபெயர்த்து தெரிவித்தேன் என்று உறுதியளிக்கிறேன்**.)**